Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி அணா 0-1-6

வருட சந்தா ரூ. 5 சனி வெளியீடு.

மலர் 18 சனிக்கிழமை 18-8-1945 ஆவணி மீ 2உ இதழ் 45

# "இந்தியாவை விட்டு வெளியேறுதல்"

## திராவிடர் தவிர மற்றவர் போகவேண்டும்

### "பஞ்ச்" கூறுகிறது

லண்டனிலிருந்து வெளியாகும் "பஞ்ச்" (Punch) என்ற உலகப்பிரசித்திபெற்ற ஆங்கில நகைச்சுவைப் பத்திரிகையின் 12-1-45 தேதி இதழில் "இந்தியாவைவிட்டு வெளியேறுதல்" (Quitting India) என்ற தலைப்பின்கீழ் காணப்படும் கட்டுரையின் மொழிபெயர்ப்பு:-

ஜப்பானியர் தோற்கடிக்கப்பட்டவுடனே நாம் இந்தியாவை விட்டு வெளியேறிவிடவேண்டும் என்கிற முடிவுக்கு நான் வந்துள்ளேன்.

நாம் இவ்வாறு செய்யவேண்டுமென்று முதலில் மோகனதாஸ் கரம்சந்த் காந்தியாலும், இப்போது முகமதலி ஜின்னாவாலும் கூறப்பட்டோம். இதற்குள்ளாகவே நாம் அதற்குற்ற உண்மையாகக் கருதியிருக்கவேண்டும்.

பிரிட்டிஷார் மாத்திரம் இந்தியாவைவிட்டு வெளியேற வேண்டுமென நான் பொருள்கொள்ளவில்லை. அந்தவகை ஒருதலைப் பட்சமான வேலையை நான் விரும்புகிறேன் என்று ஒருக்காலும் நினைக்கவேண்டாம். சரித்திரம் தொடங்கிய நாள் தொட்டு அந்த நாட்டின் மீது படையெடுத்த இந்தோ-ஆரியர்கள், சித்தியா, டார்ட்டாரி முதலிய நாடுகளிலிருந்து வந்த மங்கோலியர்கள், டர்க்கர்கள் மேலும் ஒன்பது கோடி முஸ்லிம்கள் ஆகியோரெல்லாம் ஏறக்குறைய நம்மைப் போலவே வெளிநாட்டிலிருந்து வந்திருப்பவர்களே. அவர்களும் வெளியேற வேண்டும்.

இந்தியாவை விட்டு வெளியேறும்போது நாம் முன்னாலுள்ளதைத் [illegible] அந்த இடத்திற்குப் பாத்தியமுள்ளவர்களாக யாரை விட்டுவைப்பது என்பதேயாகும்.

ஆண்டுகொண்ட அல்லது மக்களும், அவர்களது பிரதிநிதிகளான மோகனதாஸ் கரம்சந்த் காந்தி, ஜவஹர்லால் நேரு, முகம்மதலி ஜின்னா, [illegible] ஆகியோரும் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் சரித்திரத்திற்கு முந்திய மனை இப்பிராயாணத்தைத் தொடங்கும்போது அங்கு எஞ்சியுள்ளவர்களின் பொறுப்பை ஏற்று நடத்த ஏதாவது ஒரு வகையான சர்க்கார் தயாராகவேண்டும்.

உண்மையிலேயே இந்தியாவின் [illegible] அந்நாட்டின் பூர்வ குடிகளின் வழித்தோன்றிய திராவிடர்களே யாகும்.

இம்மக்கள் இக்காலத்தில் எங்கெங்கே சிதறிக்கொண்டிருந்தாலும்—அதாவது, பிரம்மபுத்ரா சதுப்பு நிலங்களில், தக்காணத்தில், மலையாளத்தில், [illegible] தீவுகளில், [illegible], மற்றும் வேறு எங்கே ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் தம் நாட்டின் உரிமையை மீண்டும் அடையவேண்டுமென அவர்களைத் தேடி அழைத்து வரவேண்டும்.

இந்நிலையில் நான் அவர் [illegible] [illegible]

பிறைப்பதாகச் சொல்லப்படும் கோண்டர்கள் என்பவர்கள் புது டில்லி, சிம்லா, கல்கத்தா, கராச்சி அல்லது அத்தகைய பிற இடங்களில் தங்களுடைய சர்க்காரை ஏற்படுத்துவதில் கவலை கொள்வார்கள் என்று சொல்ல முடியாது.

ஆனால் அவர்களது கடமைகள் தெளிவாயுள்ளன, நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்களே ஆட்சிநடத்த வேண்டும். தோழர்கள் காந்தி, நேரு, ஜின்னா மற்றவர்கள் யாவரும் வெளியேறவேண்டும். இதுவே ஜனநாயகம்.

இதில் தொந்தரவுகளே இடையூறுகளைப் பாசாங்குசெய்ய முடியாது.

வெளியேற்றப்படும் 35 கோடி மக்களும் தாங்கள் எங்கு செல்லவேண்டுமென்று கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்படுவார்கள். இதற்கு முரட்டுத்தனமான பதில் கூறாமல், அது என் வேலையல்ல என்றே சொல்லுகிறேன். தங்கள் முன்னோர்கள் நுழைந்த கணவாய் வழியாக அவர்கள் திரும்பிச் சென்றால் அக்கணவாயிலும், சமர்க்கண்டுக்குச் செல்லும் பெரிய சாலையிலும் பிரயாணத் தங்கல்களும் ஆப்கானிஸ்தான், சோவியத் யூனியன், [illegible] ஆகிய நாடுகளுடன் சில அரசியல் குழப்பங்களும் நேரிடலாம்.

ஆனால் இதைச் சரிசெய்வது சமாதானமானது. உண்மையாகவே நாம் அனைவரும் வெளியேறவேண்டியதே.

மற்றவர்களுக்கும் [illegible] வெளியேற [illegible]

# திருச்சியில் மாநாடுகள்

## செப்டம்பர் இறுதியில்

### ஆலோசனைக்கூட்ட நிகழ்ச்சிகள்

17வது மாகாண திராவிட கழக (ஜஸ்டிஸ்) மாநாடு, 4-வது மாகாண சுயமரியாதை மாநாடு ஆகிய இரு மாநாடுகளையும் திருச்சியில் நடத்துவதுபற்றி முடிவான யோசனைசெய்து, காரியம் ஆரம்பிக்க தக்கதாக அழைக்கப்பட்டிருந்த அழைப்பு வேண்டுகோளின்படி 12-8-45 ஞாயிறு காலை 10மணிக்கு திருச்சி டவுன் ஹாலில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பல ஜில்லாக்களிலும் இருந்து ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர். முக்கியமாக பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., டி. ஏ. சண்முகானந்தசாமி பி. ஏ., பி. எல்., (சென்னை) எஸ். ஆர். சுப்ரமணியம் (திருப்பூர்) டி. பி. வேதாசலம் பி. ஏ., (திருச்சி) ஆகியோரும், மேலும் திருச்சி மாவட்டத்திலிருந்து தோழர்கள் டி. எம். முத்து ('திராவிடமணி') டி. ஏ. மாணிக்கவாசகம், பொன்னுசாமி (காட்டுப்புத்தூர்) டி. வி. சுந்தரம், வானமாமலை, டி. கே. சீனிவாசன், மணக்கால் எம். கே. ராமசாமி, எம். கே. சோமசுந்தரம், ஆர். தங்கையா, ஜான் ராஜரத்தினம் (லால்குடி), சு. ம. கி. பரமசிவம் (உறையூர்), லால்குடி எஸ். ஜி. கணேசன் பாலக்கரை வ. சுப்ரமணியம், திருவானைக்கோவில் முத்துக்குமாரசாமி, டி. வி. சுவாமி, பொன்மலை ஜி. பாலசுந்தரம், கே. சுப்பையா, ஜி. பாலகிருஷ்ணன், ஜி. பத்மநாபன், வ. கோவிந்தசாமி, வி. எஸ். பெருமாள், எஸ். முத்துகிருஷ்ணன், நம்பிக்கைராஜ், திருச்சி வி. ஞானப்பிரகாசம், ஆதிமூலம், சந்திரன், டி. எஸ். துரைராஜ், திருவரங்கம் வீரமுத்து, மா. சுப்பிரமணியன், கோ. முத்துக்குமாரசாமி, ஆர். குமாரசாமி, நல்லதம்பி, எஸ். ஆர். முத்துவீரன், பா. கிருஷ்ணன், திருமங்கலம் டி. எம். கோவிந்தன், எம். சுந்தரமணி சாமி, பி. மதலைமுத்து, எஸ். ஜகநாதன், செல்லப்பா, எம். ராமசாமி, வெ. இராமலிங்கம், எஸ். எம். சோமசுந்தரம், சி. மு. கந்தசாமி, சா. தங்கவேலு, வி. ஜி. கோபால கிருஷ்ணன், வ. தனசாமி, எஸ். சுப்பராயலு, பி. சிவஞானம், கே. ஜம்புலிங்கம், திருவானைக்கோவில் தி. செங்கராஜ், உறையூர் லெட்சுமய்யா, சிதம்பரம் தங்கவேலு, கருர் பி. கே. ஐயர், தென்னூர் மருதமுத்து, கே. ராஜகோபாலன், திருவானைக்கோவில் முத்துக்கண்ணு, தென்னூர் சீனுவாசன் எஸ். எஸ். மணியன், கே. வி. எம். லெட்சுமணையா, ராஜு பிள்ளை, ராம பிள்ளை, மணச்சநல்லூர் வி. மாணிக்கம், ராமநாதன், திருச்சி செந்தில், கே. மெய்ப்பிரகாசம், அ. கரீம், இராமராஜன், அரித்துவார், சிவராமன், பொன்மலை நடராஜமூர்த்தி, தங்கவேலு, கண்மணிகள்; கொத்தமங்கலம் ஆனந்தம், மற்றும் அநேக மாணவத்தோழர்களும், கோவை மாவட்டத்திலிருந்து தோழர்கள் ஆனைமலை நரசிம்மன் பி. ஏ., சுப்பையா ச. வெ. சி. சம்பத், எஸ். கண்மணிதிரன் ஆகியோரும் சேலம் ஜில்லாவிலிருந்து தோழர்கள் பெருங்குளம் சோமசுந்தரம், பொத்தனூர் சிவப்பிரகாசம் தர்மபுரி செல்லையா ஆகியோரும், மதுரை மாவட்டத்திலிருந்து தோழர்கள் மதுரை எஸ். ராமமூர்த்தி, சிவஞானம், திண்டுக்கல் எம். ஆர். மந்திரன், கோவிந்தசாமி செட்டியார், வீராசாமி, லெட்சுமணன் முதலியோரும், ராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து தோழர்கள் சிவகங்கை ராஜசேகரன் பி. ஏ., பி. எல்., இலகராசன், திருப்பத்தூர் சின்னதுரை, இடையாம்பன், அருந்தமிழ்த் தோழன், அறு புதுக்கோட்டை முத்துராமலிங்கம் ஆகியவர்களும், தஞ்சை மாவட்டத்திலிருந்து தோழர்கள் கே. கே. நீலமேகம், (குடந்தை), தஞ்சை சுப்பண்ணா, புலவர் குழந்தைவேலு, பட்டுக்கோட்டை ராமலிங்கம், சி. எஸ். சிதம்பரநாதன், திருவாரூர் தட்சணாமூர்த்தி, திருத்துறைப்பூண்டி எஸ். கருணானந்தம் ஆகியோரும்; தென்னார்காடு ஜில்லாவிலிருந்து தோழர்கள் கடலூர் ஆ. திராவிடமணி பி. ஏ., திட்டக்குடி சி. ராமலிங்கம், அரங்கசாமி, காவேரிப்பாக்கம் நவநீதம் முதலியோரும், வட ஆற்காடு ஜில்லா வேலூர் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடி தோழர் பிச்சையா, செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தோழர் ராமச்சந்திரன் ஆகிய பலரும் கலந்துகொண்டார்கள்.

இவ்வாலோசனைக் கூட்டத்துக்கு பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமை தாங்கவேண்டுமெனத் தோழர் வேதாசலம் முன்மொழிய, தோழர் நீலமேகம் அதை வழிமொழிந்தார். இந்த மாநாடுகள் நடக்கவேண்டியது பற்றித் தலைவர் பேசிய பின், (அது வேறு பக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது) திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) 17-வது மாகாண மாநாட்டையும், 4-வது சுயமரியாதை மாகாண மாநாட்டையும் 1945ம் வருஷம் செப்டம்பர் மாதம் 29, 30 தேதிகளில் திருச்சியில் நடத்துவதென ஒரே மனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் தோழர் பெருங்குளம் சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டுச் செலவுக்காக சேலம் ஜில்லாவிலிருந்து ரூ 1000ம் ஒப்புக்கொள்ள தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தஞ்சையிலிருந்து ரூ. 1500ம், திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் கோவையிலிருந்து ரூ. 2000ம், திண்டுக்கல் தோழர் மந்திரன் அவர்கள் மதுரையிலிருந்து ரூ. 500ம், சிவகங்கை தோழர் ராஜசேகரன் அவர்கள் இராமநாதபுரத்திலிருந்து ரூ. 500ம், கடலூர் தோழர் திராவிடமணி அவர்கள் தென்னார்க்காட்டிலிருந்து ரூ 1000ம், செங்கற்பட்டு சென்னையிலிருந்து தோழர்கள் சி. என். அண்ணாதுரையும், சண்முகானந்தசாமியும் ரூ. 1500ம் வடஆற்காட்டிலிருந்து தோழர் பார்த்தசாரதி அவர்களுக்கு எழுதி ரூ. 500ம், தோழர் வேதாசலம் அவர்கள் திருச்சியிலிருந்து ரூ. 2000ம் வசூலித்துக் கொடுப்பதாகப் பேசினார்கள்.

மாநாட்டுக் காரியங்களை முடிவுறச்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

---

தம் முன்னோர் போல ஆண்டை நாடு இருக்கி, அதிக வருமானவரி செலுத்தி; ஓய்வெடுத்துக்கொள்ளலாம்.

யான் மீண்டும் யோசித்ததில், இறுதியில் பிரிட்டிஷார் வெளியேற வேண்டுவதுதானோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் அவர்கள் இந்தியாவின் தலைவர்களையே திராவிடர்கள் விரும்புவார்கள். ஏனெனில் அவர்கள் ஓய்வுபெற்றபோது தான் முன்சொன்னவாறே தங்கள் நாட்டுக்குத் திரும்பிவிடுவார்கள்!

சில ஆயிரக்கணக்கிலுள்ள ஆங்கிலேயர் அத்தியாவசியத்திலுள்ள பூர்வகுடிகளுக்கு இடைஞ்சலின்றி, கவனிக்கப்படாமல் அதிகம் தொல்லைப்படாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

ஆட்சிக் கொடுமையிலிருந்தி, அரோக்கியம், போஷணையும் நிறைந்தும், இருப்பிடம் வசதியின்றி முன்ன கூட்டத்தினர் யாவரும் இந்தியாவை விட்டு ஒரேயடியாக வெளியேறியவுடனே; அங்கே தங்கி வேலை செய்ய யாராவது தேவை என்பது உண்மையே யாகும்.

ரோஜா முத்தையா

# திருச்சி மாநாடு ஆலோசனைக் கூட்டத்தில் பெரியார் வேண்டுகோள்

தோழர்களே!

இதற்கு முன் இதே இடத்தில் மாநாடுகள் பற்றி பல தடவை கூடிப் பேசி முடிவு செய்தபடியும், சென்ற வாரம் தெரிவித்த அழைப்புப்படியும் இன்று இங்கு கூடியிருக்கிறோம்.

அதாவது இன்று இங்கு 2 மாநாடுகள் நடத்த யோசிக்கக் கூடியிருக்கிறோம். இரு மாநாடுகளில் சுயமரியாதை மாநாடு கூட்டுவது பற்றி பல வருஷங்களாகவே முயற்சி செய்யப்பட்டு வருகிறது. சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால் இந்த ஊரில் 4-வது மாகாண சுயமரியாதை மாநாடு கூட்ட இந்த ஊர் தோழர் ஒருவர் ஒப்புக்கொண்டு பந்தல் சாமான் வியாபாரிகளிடம் ஒப்பந்தம் முதலியவை பேசி எல்லா ஏற்பாடுகளும் செய்தும், நின்றுவிட்டது. அதுபோலவே வேறுபல இடங்களிலும் முயற்சித்து முடிவு பெறவில்லை. காரணம் முன்பு நடந்த 3 சுயமரியாதை மாகாண மாநாடுகள் 10000 ரூபாய் செலவுகளில் நடைபெற்றதால் நடத்துபவர்களுக்கு ஏற்பட்ட பயமே காரணமாகும். ஆனால் ஜில்லா தாலுகா மாநாடுகளும், கூட்டங்களும் அனேகம் நடந்தே வந்திருக்கின்றன.

ஜஸ்டிஸ் கட்சி மாநாடு சேலத்தில் சென்ற வருடம் நடந்தபிறகு அடுத்த 6 மாதத்திலேயே ஈரோட்டில் மாநாடு நடந்திருக்க வேண்டும். இது பல காரணங்களால் தடைப்பட்டுப் போய்விட்டது. 4, 5 மாதத்திற்குமுன் தஞ்சாவூரில் நடத்த தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, பொன்னுசாமி முதலியவர்கள் ஒப்புக்கொண்டு இருந்தார்கள். ரேஷன் தொல்லை, இடவசதிக் குறைவு, ரயில் கஷ்டம் ஆகியவற்றாலும், தோழர் கே. கே. என்.க்கு அம்மை முதலிய அசௌகரியங்களாலும் தவக்கப்பட்டுவிட்டது. இப்போது இருமாநாடுகளையும் அதாவது சுயமரியாதை இயக்க மாநாட்டையும் 17-வது ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டையும் இங்கு கூட்ட முடிவு செய்கிறோம். இப்பொழுது நிலைமையும் நன்றாக இருக்கிறது. 35 ஆயிரம் மெம்பர்களும், 200க்குமேல்பட்ட கிளை ஸ்தாபனங்களும் நாடு முற்றும் நல்ல எழுச்சியும்; இயக்கத்திற்குப் போட்டி மேல்போட்டி ஏற்படும்படியான மதிப்பும் இருப்பதால் இரு மாநாடுகளும் வெற்றியாகவும் பயன் தரக்கூடிய அளவுக்கு செல்வாக்காகவும் நடக்கும் என்று கருதுகிறேன்.

இரு மாநாடுகளையும் 5000 ரூபாயில் நடத்தலாம் என்று முதலில் கருதிய நான் இன்று 15000 ரூபாய் மதிப்புப்போட வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. நம்முடன் இருந்த பணக்காரர்கள் 100க்கு 95 பேர்கள் விலகிவிட்டார்கள் அவர்களில் பலர் நமக்கு எதிரிகளாகவும் ஆகிவிட்டார்கள். நம்முடன் இருந்து வேலை செய்பவர்கள் போல் காட்டிக்கொண்டு, செல்வாக்குப் பெற்றவர்களும், வேறு தலைவர்களை அடைந்துகொண்டார்கள் என்பதோடு வேறு தலைவர்களும் இவர்களை நமக்குத் தொல்லை கொடுக்கத் தகுதியுடையவர்கள் என்று கருதி அணைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் நமக்குப் பணக் கஷ்டம், தொல்லை ஆகியவை இருக்கலாம் என்றாலும் அதனால் அதிக சௌகரியமும் உண்டு என்றும் சொல்லலாம். ஒழுங்காக வேலை நடக்கும். உதவி அளிக்காத, பொறுப்பு ஏற்காத, வேலை செய்யாத பெரியார்களுக்கும் மதிப்பு சொல்லவேண்டியதும்; அவர்களுக்கு நம்முடைய வேலைக் குறிப்பு (டைரியை) காட்ட வேண்டியதுமான தொல்லை வெகுதூரம் ஒழிந்துவிட்டது. "முதல் போடுபவர்களுக்கு லாபமும்" "வேலை செய்யாதவர்களுக்கு கூலியும்" கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லாமல் போய்விட்டது. மற்றும் நமக்கு உதவி செய்பவர்கள் போல் நடித்து செல்வாக்குப் பெற்று அந்த செல்வாக்கை நமக்கு எதிர்ப்பாகவும், நம் எதிரிகளுக்கு அனுகூலமாகவும் உபயோகிக்கும் வேதனைப்படத்தக்க நிகழ்ச்சிகளுக்கு வெகுதூரம் இனி இல்லாமல் இருக்க வசதியும் ஏற்பட்டுவிட்டது.

## நமக்கு ஏமாற்றம் ஏற்படாது

மக்களிடத்தில் மனமாறுதலையும் ஒற்றுமை உணர்ச்சியையும் முக்கியமாய் எதிர்பார்த்து நாம் வேலை செய்வதால் நமக்கு ஏமாற்றமென்பது சுலபத்தில் ஏற்படுவதற்கில்லாத நிலையில் இருக்கிறோம். இதுவரை செய்துவந்த நம் தொண்டு பயனளிக்கவில்லை என்று யார்தான் சொல்லமுடியும்? நம் இயக்க (மிஷன்) வேலையானது எவ்வளவோ பெரிய பண்டும், எவ்வளவோ கண்டிப்பான கட்டுப்பாடும், சிறந்த தொண்டு சேவை அமைப்பும் உள்ளவர்களாலும் செய்யமுடியாததில்லை, அவர்களுக்கு அவ்வளவு வசதியும் ஏற்பட்டிருக்கவில்லை என்று சொல்லும்படியானதாக இருந்து வருகிறது.

நமக்கு பத்திரிகை ஆதரவுகள் கிடையாது; நம் ஆதரவுபெற்றுப் பிறந்து வளர்ந்து வாழ்ந்த பத்திரிகைகள் நம் எதிரிகளின் கூலிப் பத்திரிகைகள் ஆகிவிட்டன, சில கட்சிகள் நமக்கு ஒப்பான எதிர்ப்பாளர்கள், தொல்லைக்காரர்கள் ஆகிவிட்டார்கள். சர்க்காரை நம் எதிரிகளுக்கும், தொல்லை கொடுப்பவர்களும் புன்சிரிப்புக் காட்டுவதன் மூலம் நம் இயக்கத்தை அழிக்கப் பார்க்கிறார்கள். பலம் பொருந்திய பார்ப்பன சமுதாயம் அடியோடு நமக்கு எதிரிகளாயும் நம்மை அழிக்கவேண்டியவர்களாயும் இருக்கிறது. செல்வாக்குப் பெற்ற எதிர் பத்திரிகைகள் நம் எதிரிகளுக்கு ஆக்கம் கொடுத்து நமக்குள் கலகக்காரர்களுக்கு தூண்டுகோலாயிருந்து நம்மை அழிக்கப் பார்க்கின்றன. நமக்குப் பண வருவாய் என்பது நம்மைக் கண்டு கேட்பவர்களாலேயே, இதுவரை யார் கொடுத்தார்கள்? எது பணம்? என்று சொல்ல வசதியற்று, கற்பனை செய்யவும் வழியற்று, சந்து பொந்துகளில் பிதற்றித் திரிகின்றார்கள் என்றால் நமக்குப் பயப்படும் ஏது? ஆகவே நான் ஒருவன் பல தொல்லை தொந்தரவுகளை, ஜாதி ஆகியவைகளை சமாளித்துக்கொண்டு உங்கள் ஆதரவையும், மாணவர்கள் ஆதரவையும் கிராம ஜனங்கள் ஆதரவையும், அடிக்கடி சாவல்கொள்ளும் வாலிப மாணவர்களைப் பற்றிக்கொண்டு, அதாவது திட்டமான முறை செய்துகொண்ட நாணயமும் கொண்டு செய்திருக்கும் வேலை இவ்வளவு என்றால் இனிமேல் யார் பயப்படமுடியும் என்று பாருங்கள். ஆகவே நாம் எப்படி ஏமாற்றமடைந்தவர்களாவோம்?

## ஜஸ்டிஸ்கட்சி

பதவியடைந்தவர்களாலேயே சாவுமணி அடிக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சிக்கு இன்று இவ்வளவு போட்டி எப்படி ஏற்பட்டது? அதுவும் அந்த காலிகளை பின் விட்டு குழியில் தள்ளிவிட்டு ஓடினவர்களும், நம்மைப் பார்த்து "நந்தப் பழம்போல கட்சியைக் கட்டிக்கொண்டு அழுது உன் பெயரையும் உன் தொண்டையும் ஏன் கெடுத்துக் கொள்கிறாய்" என்று கேட்டவர்களே அக்கட்சித் தலைவராக, காரியதரிசியாக, பிரமுகராக, பிரசாரகராக, முன்னோடும் பின்னையாக, கமிஷன் ஏஜண்டுகளாக உள்ளே இருந்து நடத்தவர்களைத் துடிக்கிறார்கள் என்றால் இதற்குக் காரணம் என்ன? தோழர்கள் இராமநாதனும், அண்ணாப்பரும், வி. வி. ராமசாமியும், சர் ராஜனும், சர். சண்முகமும் துடிக்கிறார்கள். ஏன் இவர்களைச் சொல்லுகிறேன் என்றால், இவர்கள்தான் முற்றும்

சொல்லிக்கொண்டும், சிலர் தனிப் பலனளிக்கக்கூடியதுமான கட்சியைத் தேடியும் திரிபவர்கள். இதற்கு உதாரணம் வேண்டுமானால் இவர்களது பழைய நடத்தையையும் பழைய பேச்சுக்களையுமே பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே நம் வேலை ஜஸ்டிஸ்கட்சியிலும் பயனற்றுப்போய்விடவில்லை.

### சு. ம. இயக்கம்

சுயமரியாதை இயக்கத்திலும் நம் தொண்டால் பயனேற்படவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?

இனி தங்கள் வாழ்நாள் முழுதும் சு. ம. இயக்கத்தில் சேருவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டு ஒதுங்கிவிட்டதாகச் சொல்லி மற்றவர்களையும் ஒதுங்கிவிடும்படி தூண்டுகிறவர்களும், சு. ம. இயக்கம் மதத்தை, கடவுளை, சாஸ்திரங்களைக் குறைகூறுகிறது என்று மதத்தை, சாஸ்திரங்களைக் காப்பாற்ற மத மகாநாட்டுக்குச் சென்று மதப் பிரசங்கம் செய்து மதப் பிரேரபணை செய்தவர்களும் இயக்கப் பிரமுகர்களாக, பிரசாரகர்களாகத் தங்களை ஒப்படைக்கத் துடிக்கிறார்கள் என்றால் நாம் எதில் தோல்வி அடைந்துவிட்டோம் என்று கேட்கிறேன்.

இவை ஒருபுறம் இருக்கட்டும், நம் பிறவி எதிரிகளான ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) படும்பாட்டை, அவர்கள் அழும் (ஒப்பாரியான) அழுகுரலைச் சற்று காதுகொடுத்துக் கேளுங்கள். அதுமாத்திரமா 'இனி ஆரிய ஏகபோக ஆதிக்கம் செல்லாது ஒழிந்துவிடும்' என்கின்ற தன்மைக்கு நெருங்கிக்கொண்டு இருக்கிறோம்.

இன்று ஆரியர் வாழ்வின் கீழ் நிலைக்கு உதாரணம் வேண்டுமானால் ஒரு சிதம்பரநாத முதலியாரும், ஒரு இராமலிங்கம் பிள்ளையும், ஒரு [illegible]ராரும், ஒரு அண்ணாமலை பிள்ளையும் தவிர அவர்களுக்கு ஆழ்வார்களாகவும், காளிதாசர்களாகவும், கம்பர்களாகவும் ஆட்கள் இல்லை என்றால், - நம்மை எதிர்த்து வேலை செய்ய, எதிர்ப்பிரசாரம் செய்ய ஆட்கள் இல்லை என்றால், ஆரியர்களின் பரிதாபநிலைக்குவேறு என்ன சாட்சிவேண்டும்? "வகுப்புவாதம் கூடாது" என்கின்ற பார்ப்பனர்கள் தனி சங்கம், தனிப் பள்ளிக்கூடம், வைக்கப் புறப்பட்டு விட்டார்கள் என்றால் நாட்டில் அவர்கள் நிலை எவ்வளவு இழிந்திருக்கின்றது என்று பாருங்கள். தோழர்களே; கடைசியாக ஒன்று சொல்லுகிறேன்.

### நம்மை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது

நம்மை நம் இன எதிரிகள், கூலிகள்தான் ஆகட்டும் நம் பிறவி எதிரிகளான ஆரியர்கள்தான் ஆகட்டும், மற்றவர்கள்தான் ஆகட்டும் ஒன்றும் செய்துவிடமுடியாது. நம்மை எதிர்க்க எதிர்க்க நமக்கு பலம் அதிகம், முன்னைவிட நமது இயக்கத்திற்கு பலம் அதிகம். நமக்கு ஏமாற்றமும் ஏற்படப்போவதில்லை. நமக்கு பட்டம் வேண்டுமா? பதவி வேண்டுமா? பணம் வேண்டுமா? அல்லது பெருமை வேண்டுமா? என்னவேண்டும்? நம் காலில் நின்றுகொண்டு, யாருக்கும் அடிமையாய் இல்லாமல் நாட்டில் சுதந்திரமாய் வாழும் மட்டிலேயேபோதும் வாழ்ந்து வருகிறோம். நோய் வந்தால், இறந்து (அதாவது காலும் தொண்டையும்) ஒடித்தால் ஒழிய நமக்கு ஏமாற்றம் ஏற்படப் போவதில்லை. இதற்கு இன்னொரு காரணம் தனிப்பட்ட முறையில் வேண்டும் என்பதில்லை. மானம், நாணயம் உள்ள யாருக்கும் இனி இதைத் தவிர வேறு வேலை இருக்கப் போவதில்லை என்கின்ற நிலைக்கு வந்துவிட்டோம்; இந்தமாதிரியான ஆட்சிகாலத்தில் யாருமே இல்லை என்றால் அப்படிப்பட்ட இனம் அமெரிக்கன் அணுகுண்டு வீசப்படும் வரையில் உயிர்வாழ்வதில் யாருக்குத் தான் என்ன பயன்?

ஆகவே நாம் எந்தவிதத்திலும் கவலையை விட்டுத் தங்களால் கூடியதை ஒவ்வொருவரும் தனித்தோ சேர்ந்தோ வேலை செய்வோம். எனக்கு முன்னிலும் இப்போது சற்று பலம் அதிகம். என்னை இதுவரை இருந்த தொல்லையும், மனவேதனையும், முட்டுக்கட்டையும் அளித்து வந்தவர்கள் தப்பாடியோ விலகி விட்டார்கள், அவர்கள் தொல்லைப் பிரசாரம் எனக்குக் களைப்பை நீக்கக் கூடிய சஞ்சீவியாய் உதவுகிறது.

### 10-வருஷத்திற்கு ஞாபகம் இருக்கும்படி

ஆகையால் இந்த மகாநாட்டை மற்றும் ஒரு 10 வருஷ காலத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் மாநாடாக நடத்த வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். செங்கல்பட்டு மாநாடு என்றால் இனியும் பலருக்கு கொள்கைக்கும் அறிமுகத்துக்கும் புரட்சிக் கருத்துக்கும் எடுத்துக் காட்டாக இருக்கிறது. அப்போது ஏதோ சில பணக்காரர் உதவி இருந்தது என்பதல்லாமல் மற்றபடி யாருடைய மூளை, யாருடைய தொண்டு நமக்கு உதவியாக இருந்தது?

இன்று நாம் அந்த நிலையில் இல்லை. மூளை பரவிவிட்டது, பணம் தேவை இல்லாமல்போய் விட்டது. அதாவது பணத்துக்கு பணக்காரர் தயவு தேவை இல்லை. தொண்டுக்கும் ஏராளமான வாலிபர்கள், தொழிலாளத் தோழர்களுடைய உதவி, சமூகத்தில் இலட்சியமும் தேவையும் இல்லாத வேதாசலம் போன்ற பல அன்பர்கள் உடனுழைப்பு ஆகியவையும் இருக்கின்றன.

இன்றைக்கு நமக்கு இந்த இரண்டு மாநாடுகளுக்கும் 15000 ரூபாய்கள் மேல் குறைவில்லாமல் வேண்டி இருக்கிறது. பத்துபேருக்கு மாத்திரம் 2500 ரூபாய் ஆகும்; நான் யாரையும் ரூ கேட்க மாட்டேன், கேட்டால் அவர்களுக்குக் "கடன்காரனாக" ஆகவேண்டும். நீங்கள் தான் இல்லாதேனும் பொறுப்பு ஏற்று சேகரிக்கவேண்டும். எனவே முதலில் தோழர் நீலமேகம் அவர்களை அழைக்கிறேன், அவர் வழிகாட்டட்டும்" என்று சொல்லி உட்கார்ந்தார்.

1. உடனே தோழர் கே. கே. நீலமேகம் எழுந்து தஞ்சைக்கு ரூ. 1500 வசூலித்துத்தர ஒப்புக்கொண்டார்.

2. கோவைக்கு திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்ரமணியத்தை அழைத்தார். அவர் கோவைக்கு ரூ. 2000 வசூலித்துத்தர ஒப்புக்கொண்டார்.

3 சேலம் மிட்டாதார் சோமசுந்தரக் கவுண்டர் அவர்கள் ரூ.1000மும்.

4. தென்ஆற்காடு தோழர் திராவிடமணி ரூ 1000மும்.

5. சென்னை செங்கற்பட்டுக்கு தோழர் அண்ணாதுரை தோழர் சண்முகம் அவர்கள் ஆதரவில் ரூ. 2000மும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகியவைகளுக்குத் தோழர்கள் மத்திரன் இராஜசேகரன் முதலிய ஐவர்கள் 2000 ரூபாயும்,

வட ஆற்காட்டுக்குத் தோழர் மிட்டாதார் பார்த்தசாரதி ரூ 500 குறையாமல் 1000 வரை வசூலித்துத்தருவதாக ஒப்புக்கொண்டதாக அண்ணாதுரையும் சொன்னார்கள்.

தோழர் வேதாசலம் அவர்கள் திருச்சி ஜில்லாவில் ரூ 2000 வசூலிப்பது கஷ்டம் என்றும் ஆனாலும் முயற்சிப்பதாகவும் சொன்னார்.

இந்தப்படியாக அந்தக் கூட்டத்தில் தலைவர் பேச்சு முடிந்த உடன் 1000. ரூபாய்க்கு மேல் பணத்திற்கு வழி ஏற்பட்டது.

அந்த இடத்தில் சுமார் 30 பேர்கள் வரவேற்புக் கமிட்டிக்கு ரூ. 5 வீதம் செலுத்தி அங்கத்தினர்கள் ஆனார்கள். அடுத்தகூட்டம் 23-8-45 தேதி என்று தெரிவிக்கப்பட்டது.

## ஏஜண்டுகள் தேவை

சேலம் நாமக்கல்லிலிருந்து சென்னை மாகாண ஷெடியூல்டு வகுப்பு பெடரேசன் துணைச் செயலாளர் திரு பி. முத்துசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு "சமத்துவம்" வாரப்பத்திரிகை 23-8-45தேதி முதல் வியாழன் தோறும் வெளிவரும், இப்பத்திரிகை ஷெடியூல்டு வகுப்பு மக்கள் நலம்கருதி சீர்திருத்தக் கொள்கையுடன் ஊழியம் புரியும்.

ஆண்டுசந்தா ரூ. 4—0—0
தனிப்பிரதி 0—1—0

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

விபரத்திற்கு—
மானேஜர், சமத்துவம் ஆபீஸ்,
நாமக்கல், சேலம் ஜில்லா

ரோஜா முத்தையா

## திருச்சியில் நடந்ததென்ன?

### தேசியப் பத்திரிகையின் தகிடுதத்தம்

'திருச்சியிலே சு. ம. க்களின் காலாடித்தனம்' என்ற தலைப்பின் கீழ் தினமணி முதலிய ஏடுகள் தீட்டியுள்ளன. அன்று நடந்தது என்ன? 5-30 மணிக்கு திராவிட மாணவர் கழகத் திறப்புவிழா ஆரம்பித்து 7-35-க்கு முடிந்துவிட்டது. தளபதி அண்ணாதுரை அவர்களின் சொற்பொழிவின் நடுவில், ஒரு காங்கரஸ் தோழர் கேள்வி கேட்டார். அதற்கு அண்ணாதுரை அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்குங்கால் (Don't Bluff. Answer to the Point) "உளறாதே. கேள்விக்கேற்ற பதில் கூறு" என்று கூறினார் அக்காங்கரஸ் தோழர். அவரை ஒன்றும் செய்யாமல் வெளியே கொண்டுவிட்டனர். சிறிது நேரம் கழித்து 'மகாத்மாவுக்கு ஜே!' என்று கூட்டத்திற்கு இடையூறாக இரைந்தனர். பிறகு சொற்பொழிவு முடியவே, தோழர் ஜனார்த்தனத்தின் நன்றிகூறலுடன் கூட்டம் கலைந்தது. பின்னர் டவுன்ஹால் சதுக்கத்தில் ஒரு காங்கரஸ் கூட்டம் நடைபெற்றது.

நம்மியக்கத் தோழர்கள் கேள்வித்தாள் ஒன்று கொடுத்தனர். அதற்குப் பதில் கூறாததால், நம்மியக்கத் தோழர்கள் 'வெட்கம் வெட்கம்' என்று கத்தினர். அம்மேடையில் ஒரு காங்கரஸ் தோழர், 'அண்ணாதுரை ஒழிக!' என்று அலறினார். முதலில் நம்மியக்கக் கூட்டத்தில் கலகம் விளைவிக்க முயன்றதாலும், 'அண்ணாதுரை ஒழிக!' என்று கத்தினதாலும், வெகுண்ட சில மாணவரல்லாத தோழர்கள் கொடிகளைப் பிடுங்கிக்கொண்டு ஓடினார்கள். ஒருசமயம் கொளுத்தி இருந்தாலும் இருக்கலாம். முதலில் கூட்டத்திற்குள் வந்து வலிய வம்பு செய்துவிட்டு பத்திரிகை பலத்தைக்கொண்டு எதிரிமேல் குறைகூறுவது பேடித்தனமல்லவா? தேசியப் பத்திரிகைகள் என்னும் பார்ப்பனப் பத்திரிகைகள் என்றுதான் நாணயமாய் நடந்து காட்டில் அமைதி உண்டாக்குமோ?

இங்ஙனம்,
எம். ஏ. ஆடலழகன்,
செயலாளர்.

## சாந்தா அல்லது பழனியப்பன்

நாகைத் திராவிட நடிகர் கழகத்தினரால் திருவாரூர் கருணாநிதி தியேட்டரில் "சாந்தா அல்லது பழனியப்பன்" என்ற நாடகம் 11-8-45 முதல் நடைபெற்றுவருகின்றது. புரோகிதம் வைதீகம் ஆகிய பழங்கொள்கைகளைச் சாடிப் புத்துலகிற்குச் சீர்திருத்த வழியிலே செலுத்திச் செல்லும் முறையிலே அமைந்துள்ளது இந்நாடகம்.

அடுக்கடுக்கான வசனங்களில் அறிவும், அழகும், கருத்தும் செறிந்து காணப்படுகின்றன. உணர்ச்சி பொங்கும் திறமையான நடிப்புகள். விறுவிறுப்பான கதைப்போக்கு இசையாவும் சேர்ந்து நாடகத்தின் சிறப்புக்குத் துணைசெய்கின்றன. பழமை விரும்புகின்ற இச்சமுதாயம் பார்த்துக் களிக்க வேண்டிய நாடகமே இது.

## திராவிட மாணவர் முதல் மாகாண மாநாடு

7-8-45 மாலை 6 மணிக்கு கடலூர் O. T. யில் தோழர் சி. இளவழகன் தலைமையில் நடந்த திராவிட மாணவர் ஆலோசனைக் குழுவினரின் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

வரவேற்புக்குழு: தோழர்கள் என். தவமணி இராசன் தலைவர், இரெ. இளம்வழுதி செயலாளர், இரா. சொக்கப்பா பொருளாளர், என். கருணாநந்தம் விளம்பர அதிகாரி. மேலும் வரவேற்புக்குழு உறுப்பினர்கள், மாநாடு நடத்தவேண்டிய இடம், தேதி, அழைக்கப்படவேண்டிய தலைவர்கள் ஆகிய விஷயங்களைத் தலைவரும், செயலாளரும் கலந்து முடிவு செய்வது. பொருளுதவி செய்யுமாறு ஆங்காங்குள்ள மாணவத் தோழர்களையும், இயக்க அன்பர்களையும் கேட்டுக்கொள்வதோடு, இவ்வலுவலைக் கவனிக்க தோழர் என். தவமணி இராசனுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

## 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ்) மாநாடு 4வது மாகாண சுயமரியாதை மாநாடு

29, 30-9-45
சனி, ஞாயிறு கிழமைகளில்
திருச்சினாப்பள்ளியில் நடைபெறும்

பிரதிநிதி, வரவேற்புக்கழக டிக்கெட்டுகள் உங்கள் ஜில்லா தலைவர்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

### திராவிடக் கண்காட்சி.

திராவிடத் தலைவர்கள், வீரர்கள், அரசர்கள், புலவர்கள், பெண்மணிகள் படங்களும்,

திராவிட நாகரிகம், இலக்கியம், சரித்திரம், மதம் சம்பந்தமான சகல ஆங்கில, தமிழ் புத்தகங்களும்,

திராவிடமக்கள் எவ்வாறு அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் ஆரியத்திற்கு அடிமையானார்கள் என்ற விபரம் காட்டும் சித்திரங்களும்,

திராவிட இசைக்கருவிகளும் காட்சியில் வைக்கப்படும்.

பெருந்திரளான மக்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

கட்டணம் கிடையாது.
விபரங்கள் பின்னர்.

டி. பி. வேதாசலம்,
சி. என். அண்ணாதுரை.
செயலாளர்கள்.

ஜப்பான்மீது இறுதித் தாக்குதலுக்கான
நடவடிக்கைகள் கொந்தளித்துப்
பெருகிக்கொண்டிருக்கின்றன
என்பது
ஒவ்வொருவருக்கும் தெரியும்
இதன் விளைவு என்ன என்பதை எண்ணிப்பார்த்து
மே. த. கவர்னரின்
துருப்புகள் உதவி நிதிக்கு
பணம் உதவி புரியுங்கள்.
(ஹானரரி டிரஷரர், கவர்னர் போர் நிதி C/o இம்பீரியல் பாங்க்
இந்தியா என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பவும்.)

குடி அரசு

1945-வரு ஆகஸ்டு மீ 18-உ

# யுத்தம் முடிந்தது!

உலகயுத்தம் முடிந்துவிட்டது. ஜெர்மனி சரணாகதி அடைந்த 100-நாட்களுக்குள் ஜப்பானும் சரணாகதி அடைந்தது. இதனால் தான் உலகயுத்தம் முடிந்துவிட்டது என்கிறோம்.

ஜெர்மனியும் ஜப்பானும் சரணாகதி அடைந்ததால் நடந்துகொண்டு இருந்த ஒரு யுத்தம்முடிந்தது என்பது அருத்தமே தவிர இனி நடக்கப் போகும் யுத்தமோ, நடக்கவேண்டிய யுத்தமோ முடிந்துவிட்டதாக சொல்லிவிடமுடியுமா? எப்படி முடியும்? ஏன் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் ஜெர்மனியும் ஜப்பானும் சரணாகதி அடைந்ததனாலேயே உலகில் நீதியும் சமாதானமும், அமைதியும் ஏற்பட்டுவிட்டது என்று அருத்தமா?

அநீதியும், அயோக்கியர்கள் ஆதிக்கமும், வஞ்சகர்களின் பித்தலாட்டமும், முரடர்களின் தொல்லையும் ஆகியவை சரணாகதி அடையவேண்டாவா? பேராசைக்காரர்களின் சதியாலோசனையும் சரணாகதி அடையவேண்டாமா? இவையெல்லாம் ஆகாமல் "யுத்தம்முடிந்துவிட்டதால்" பயன் என்ன? என்ற சிந்தனை ஏற்படுகிறது. யுத்த வெற்றி தோல்வி என்பதெல்லாம் வலுத்தவன் ஜெயித்தான், இளைத்தவன் தோற்றான் என்பதல்லாமல் வேறு எந்தக் கோர்ட்டு தீர்ப்பின்படியாவது, அல்லது எந்தத் தர்மதேவதை கட்டளைப்படியாவது அவை நடந்ததாகச் சொல்ல என்ன பரீட்சை இருக்கிறது?

வேடிக்கையாகவோ அல்லது வினயமாகவோ தான் சொல்லவேண்டுமானால் யுத்தம் முடிந்ததின் பயனாக நமது நாட்டில் எத்தனையோ பேர் மனவேதனை அடைகிறார்கள். உதாரணமாக வியாபாரிகளின் முகத்தைப் பார்த்தால் 100க்கு 99 வியாபாரிகளின் முகம் சனிக்கிழமை இரவு தாலிகட்டி ஞாயிற்றுக் கிழமை காலை தாலி அறுத்த பெண் முகம்போல் காணப்படுகின்றது.

யுத்த காரணமாய் பதவி, உத்தியோகம், கொழுத்த சம்பளம், கண்ட்ராக்ட்டுகள் ஆகியவை மூலம் பண மூட்டை கட்டியவர்கள் வழிப்பறிகொடுத்த திருடன் அடையும் துக்கம் போல் துக்கத்தில் மூழ்கி இருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் தானே இன்று நாட்டுப் பெருங்குடி மக்களாகவும் கருதப்படுகிறார்கள். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" உயர்ந்தோர் என்பவர்கள் யார்? பெரியவியாபாரிகள், பெரிய உத்தியோகஸ்தர்கள், பெரிய பணக்காரர்கள், பெரிய அருவைக்காரர்கள், பெரிய படிப்பால் பயன் அனுபவிப்பவர்கள், உயர்ந்த ஜாதியில் ஓட்டல் காப்பிக்கடைக்காரர்கள் ஆகியவர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். ஆகவே இந்த உயர்ந்தோர்களுக்கு இன்று யுத்தம் முடிந்துவிட்ட சேதி ஒரு துக்ககரமான சேதியாகத்தான் இருக்கிறது.

மற்றும் கூலிக்காரர்களுக்கும் கூட பலருக்கு யுத்தம் நல்ல உதவி செய்து வந்தது. கள்ளுக்கடை, சினிமா, கனவாணி, முடிச் சவிழ்க்கி, தாசி, வேசி, சில்லரை உத்தியோகஸ்தர்கள், கக்கூசுக் காரர்கள் வரை உள்ளவர்களுக்கு நம் நாட்டில் யுத்தம் நல்ல உதவி செய்தது. மற்றும் கடவுள்களிலும் மாரியம்மன் முதல் ஏழுமலையான் வெங்கிடாசலபதி பழனி திருச்செந்தூர் கடவுள்கள் வரை நல்ல போகபோக்கியமும், அர்ச்சகன், புரோகிதன் வரை நல்ல பிரைசம் அடித்து வந்தது. எந்த ஆண் பிள்ளையை, ஏன் கிழவனைக்கூடப் பார்த்தாலும் கழுத்தில் தங்கச் சங்கிலியும், கையில் தங்கக் கடிகாரமும், விரல்களில் வளையல் போட்டதுபோல் மோதிரங்களும் துலங்கியவண்ணமிருந்தன.

ரயில்களிலே 3வது வகுப்பு சிறகு வண்டிபோலவும், 2வது வகுப்பு பொதி மூட்டைவண்டி போலவும் 1வது வகுப்பு, குறுகி உட்கார்ந்து போகவேண்டிய வண்டிபோலவுமே இருந்தன. ரயில் டிக்கட் கொடுக்குமிடத்தில் நிற்கிற போலீஸ்க்காரர்களுக்கு தினம் 25ரூபாய் போலும், மேலும் வரும்படியும் டிராவலிங் டிக்கட் கலெக்டர்களுக்கு தினம் 30, 40 ரூ. போல் வரும்படியும் என்றால் மற்ற விபத்திகளைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. இந்த நிலையில் யுத்தம் திடீரென்று முடிவடைந்துவிட்டது என்றால் இந்த யுத்தமுடிவுக்கு இந்த மக்கள் மகிழ்ச்சி அடைவார்களா என்பது சிந்தித்தால் யுத்தம் நின்றதின் பயன் ஒருவாறாவது விளங்கிவிடும்.

யுத்தத்தால் மக்கள் அடைந்த நஷ்டம், இழந்த உயிர், பட்டவதை, மனக்கிலி ஆகியவை என்னுவதற்கே பயங்கரமானவை என்றாலும் இவைகளும் மேலே சொன்ன மக்களினுடைய மேல்கண்ட அனுபவத்திற்குத் தான் பயன்பட்டதே தவிர நம் நாட்டிற்கு என்ன மாதிரியான நீதிக்கும் சமாதானத்திற்கும் மனக்குறை நீங்கவும் பயன்பட்டது? அல்லது பயன்படப்போகிறது? என்று அறிய ஆசைப்படுகிறோம்.

மனிதனை மனிதன் தீண்டப்படாதவன் என்று கருதுகிற, நடத்தப்படுகிற கொடுமையும், உழைப்பாளி உழைப்பைச் சோம்பேறியும், அயோக்கியனும், வஞ்சகனும் அடையும்கொள்ளையும், பட்டினிக் காதலைப்பும், அஜீரண வயிற்றுப் போக்கும், அயோக்கியர்களுக்கும் வஞ்சகர்களுக்கும், காலிகளுக்கும், கூலிகளுக்கும், இழிமக்களுக்கும், நாட்டில் பெருமை இருக்கும் நன்மையும், யோக்கியர்கள் அவமதிக்கப்பட—குறைகூறப்பட நடக்கும் சூழ்ச்சியும், ஒன்றோடொன்று முட்டிக்கொள்ளுகிற கோரக் காட்சியும் ஒழிவதற்கு யுத்தமுடிவால் வழி ஏற்படுத்தி இருந்தால் இந்த யுத்தம் முடிவடைந்ததைக் குறித்து "அப்பாடா யுத்தம் ஒழிந்தது. இனி யுத்தம் ஏற்படாது. ஏற்படவேண்டிய அவசியமும் இல்லை" என்று திருப்தி அடையலாம். அப்படிக்கில்லாமல் அணுக்குண்டுக்குப்பயந்து சரணாகதி அடைந்த யுத்தமுடிவில் எத்தனைகாலம் நீதியும் சமாதானமும் நிலைநிறுத்த முடியும்? இன்னொருவனுக்கு அதைவிடப் பெரிய சக்திகொண்ட குண்டு கிடைக்கும்வரைதானே?

எப்படி இருந்தாலும் "யுத்த பிடை ஒழிந்தது" என்பது வரவேற்

ரோஜா முத்தையா
ச்சி நூலக அறக்கட்டளை

கத் தகுந்ததும் மகிழ்ச்சி அடையத் தகுந்ததுமாகும்.

நம் அரசாங்கத்தார் இந்த யுத்த முடிவை நீதியும் தர்மமும் வெற்றி பெற்றது என்று சித்தரித்து வருவார்களானால் நமது நாட்டைப் பொறுத்தவரையாவது தீண்டாமையும், பார்க்காமையும் தேவர் குலமென்றும், தேவடியாள் மக்கள் குலமென்றும், எண்ணுகின்ற; நடத்தப்படுகின்ற பேதத்தையும் கட்டையுமாவது ஒழிப்பார்களா? அல்லது அதற்கு ஒரு "யுத்தமும் அணுக்குண்டும்" ஏற்பட்ட பிறகுதான் இது நீதியும் தர்மமுமாக எண்ணப்படுமா? அதுவரை பொறுக்கவேண்டுமா? என்று நாமே நம்மைக் கேட்டுக் கொண்டு கடைசியாக "யுத்தபீடை ஒழிந்த" வெற்றி மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுகிறோம்.

## திருச்சி மாநாடுகள்

திருச்சியில் அடுத்த மாதம் (செப்டம்பர் மாதம்) 29, 30 தேதிகளில் ஜஸ்டிஸ்கட்சி அதாவது சேலத்தில் நடந்த 16-வது ஜஸ்டிஸ் கட்சி மாநாடு வரையில் தென் இந்திய நல உரிமைச் சங்கம் எனவும், (South Indian Liberal Federation) S. I. L. F. எனவும் பெயர் இருந்து சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் எனவும், திராவிடியன் பெடரேஷன் (Dravidian Federation) எனவும், கட்சி ஒழுங்குமுறைப்படி பெயர் மாற்றப்பட்ட ஜஸ்டிஸ் கட்சியின் 17வது பொது மாநாடும் சுயமரியாதை இயக்க 4-வது மாநாடும் திருச்சியில் நடத்த ஏற்பாடாகி இருக்கிறபடியால் மறு பக்கத்தில் இருக்கிற சேதிகளைக் கொண்டு தெரியலாம். இந்த மாநாடுகள் சரித்திரத்தில் இடம்பெறக் கூடிய மாநாடுகளாகவும் மக்களின் தகுதியையும் பெருமையையும் வரிக்கும் மாநாடுகளாகவும் நடைபெறக்கூடியவைகளாக இருக்கும். மாநாடுகள் பிரசாரத்திற்கோ நிர்வாககாரியத் துவக்கத்திற்கோ இருக்க வேண்டுமே ஒழிய பெருமைக்கும் கட்சி செல்வாக்கிற்கும் சிலரது சுயநல விளம்பரத்திற்கும் இருப்பது முக்கியமல்ல என்பது நமது கருத்தாகும்.

சுயமரியாதை இயக்க மாநாடுகளும், பெரியார் தலைமைக்கு வந்த பிறகு ஏற்பட்ட ஜஸ்டிஸ் கட்சி மாநாடுகளும் மக்களை ஊக்கப்படுத்திக் கொள்கைகளை தீவிரப்படுத்தி நாட்டில் மக்களுக்கு உற்சாகத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கி சிறிதாவது கட்டுப்பாட்டை உண்டாக்கியும் எதிரிகளையும் இளக்கிவர செருக்கையும் அவற்றின் கொள்கைகள் காரியத்தில் நடைபெறவும் பயன்பட்டு வந்திருக்கின்றன. இனியும் தீவிரப்படுத்தவேதான் இனி நடக்கவேண்டிய மாநாடுகளும் பயன்படவேண்டும் என்பது நமது அவா. இவ்விரு இயக்கங்களின் பயனாய் நம்நாட்டில் சீக்கிரத்தில் தக்கதொரு மாறுதல் ஏற்படப் போகிறது. இந்த மாறுதலில் நமக்குத் தகுதியான முன் இடம்பெற நாம் முயலாமல் நம்நம் சுயநலத்தை மாத்திரம் கருத்தில் வைத்து பாமர மக்களை ஏமாற்றவோ யாரோ சிலர் சொந்த லாபம் பெறவோ முயற்சித்தோமானால் எவ்விதலாபமும் கிடைக்காமல் போவதோடு நமது சந்ததிகளின் நிலை இனியும் கீழான நிலைக்குப் போய்விடும்.

இன்று நம் சமூகத்தில்மாத்திரம் வேறு எந்த நாட்டிலும், எந்த சமூகத்திலும் இல்லாத இழி மக்கள் பெருகி கீழ்மக்களாய் வாழ்ந்துகொண்டும் இனத்தையும் மானத்தையும் விற்று ஈனவாழ்வு பலர் வாழவும் காரணம் என்ன என்று பாருங்கள்? நம் மக்களில் படித்தவர்கள், பதவிஆளர்கள், பணக்காரர்கள், இவைகள் உள்ளவர்கள் என்பவர்களில் எத்தனை பேருக்கு மான உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்கிறது என்று எத்தனை விரல்விட முடியும்? என்று பாருங்கள்.

பார்ப்பனர்களில் இவை இல்லாதவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பாருங்கள்.

எந்தப்பார்ப்பானை, எவ்வளவு கீழான பார்ப்பானை, எவ்வளவு அன்னக்காவடி பத்திரிகை உடைய பார்ப்பானைப் பார்த்தாலும் 'காங்கரஸ் என்னுடையது,' 'இந்துமகாசபை என்னுடையது,' 'பொதுவுடைமைக் கட்சி என்னுடையது' 'வர்ணாச்சிரம சபை என்னுடையது' 'இந்து மதம் என்னுடையது' 'வடமொழி என்னுடையது' என்று எல்லா கட்சியையும் தன்னுடையது என்று ஒன்றுபோல் பாவித்து ஒவ்வொரு பார்ப்பனனும் சிறிதும் பிளவின்றித் தொண்டாற்றுகிறான்.

நம்மவர்களைப்பாருங்கள். ஒரே கட்சியை, ஒரேஸ்தாபனத்தை 'அது வேறு, என்னுடையது வேறு,' 'அது அமைப்பில்லாதது, ஒழுங்கில்லாதது, அதிலிருப்பவர்கள் சர்வாதிகாரிகள், கணக்குக் காட்டாதவர்கள், சுயநலக்காரர்கள், மற்றவர்களை நம்பாதவர்கள்' 'நான் ஆரம்பித்தக் கட்சிதான் சரியான கட்சி, என்னிடம் இருப்பவர்கள்தான் யோக்கியர்கள், உண்மைத் தொண்டு ஆற்றுபவர்கள், எங்கள் பிரசாரகர்தான் காரியஸ்தர்கள், நற்சாட்சிப் பத்திரமுடையவர்கள், உண்மைக்கு உழைக்க முன்வந்த தியாகிகள்' என்று சொல்லி குறைகூறி இருக்கிற கட்சியில் இருந்து ஓடிப் போய், இருக்கிற கட்சிக்குக் கேவலம் வரும்படியாகக் காரியங்கள் செய்வதோடு பலர் எதிரிகளுக்குக் கூலிகளாகவும், ஆதரவு ஏற்படச்செய்பவர்களாகவும் இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்தநிலை ஏற்பட்டதற்குக் காரணம் பார்ப்பனர்கள் அவர்களது தப் பிரசாரம், சமுதாய அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றால் நமக்கு மான ஈனம் இல்லாமல் செய்து விட்டது என்றாலும் அதைத் தெரிந்தவர்களும் அந்தப்படியே இருப்பதென்றால் நம்மில் தக்கதொரு புரட்சி இல்லாததும், நம்மவர்களில் ஒரு சிலராவது தீவிரக் கவலை கொண்டு வேண்டிய தொண்டாற்றி மக்களின் மானத்தைக் கிளப்பி அதற்கு செல்வாக்கு உண்டாக்கி விடாததுமேயாகும்.

ஆதலால் சேலம் மாநாட்டின் பயனாக நாட்டில் பெற்ற உணர்ச்சிப் பெருக்கைக்கொண்டு திருச்சி

## திராவிடர் கழகத்திற்கு

(ஜஸ்டிஸ் கட்சிக்கு)

18-8-45 வரையில்
அங்கத்தினர்கள் 33866
சந்தா ரூ. 3367—0—0

மாநாடுகளில் பெரியதொரு காரியம் செய்யவேண்டியிருப்பதால் கூடுமளவு மானவுணர்ச்சி உள்ள திராவிட மக்களும் அதில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று இறைஞ்சுகின்றோம்.

திருச்சி மாநாட்டுக்கு 15000-ரூபாய்க்கு மேல் செலவுத் திட்டம் ஏற்படும்போல் இருப்பதால் உடனே,

1. ஒவ்வொருவரும் பணம் உதவவேண்டும்.

2. சவுகரியமுள்ளவர்கள் உடனே திருச்சி வந்து மாநாட்டுத் தொண்டில் பங்குபெற்று உதவ வேண்டும்.

3. ஜில்லாக்கள்தோறுமுள்ள தோழர்கள் முன்வந்து ஏற்றுக்கொண்டு போயிருக்கிற தொகைகளை உடனே வசூலிக்க வேண்டும்.

4. ஆர்வமுள்ளவர்கள் வேறு எதாவது பதவியில் இருந்தாலும் ஒரு மாதத்துக்கு ஆவது லீவ் வாங்கிவந்து காரியாலயவேலைக்கு உதவவேண்டும்.

5. ஒப்புக்கொண்ட தொகையில் பகுதியாவது 23 தேதி திருச்சியில் கூடும் மாநாடு நிர்வாகக்கூட்டத்தில் கொண்டுவந்து காரியதரிசிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

காரியதரிசிகள் தோழர்கள் தி. பொ. வேதாசலம், சி. என். அண்ணாதுரை ஆகியவர்கள் இம்மாநாடு விஷயத்தில் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மக்கள் உண்மையான ஒத்துழைப்புக் கொடுக்காவிட்டால் எப்படி முயற்சி கைகூடமுடியும்? ஆகவே இந்த மாநாட்டை ஒரு மாபெரும் தன்மானப் பண்டிகை போல் மக்கள்கருதி வெற்றியுடன், உடனே பயன் ஏற்படும்படி நடத்திக்கொடுக்க வேண்டுகிறோம்.

## திருச்சி கூட்டங்களில் குழப்பம்?

திருச்சி டவுன் ஹால் மண்டபத்தில் 12-8-45 காலை 10 மணிக்கு ஜஸ்டிஸ், சுயமரியாதை இயக்க மாநாடுகள் சம்பந்தமான காரியங்களைப் பற்றி பேசிக்கக் கூட்டம் ஏற்பாடாகி இருந்தபடி. பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்தவுடன் பெரியார் ஈரோடு சென்று விட்டார்.

மாலையில் அதே மண்டபத்தில் அதாவது கூட்டத்திற்கு உள்ளாக தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் திருச்சி திராவிட மாணவர் கழகத் தொடக்கவிழா நடத்தினார்.

அதுசமயம் சில காங்கரஸ் மாணவர்கள் உள்ளே வந்து தோழர் அண்ணாதுரையை அவர் பேசியது பற்றியோ, பொது விஷயம் பற்றியோகூட அல்லாமல் தனிப்பட்ட முறையில் குறும்புத்தனமான கேள்விகள் கேட்டார்கள். அதற்குத் தோழர் அண்ணாதுரை பதில் சொல்லிவிட்டு மேலும் பொதுவாகப் பல விஷயம் பேசிக் கழகத்தைத் திறந்து வைத்துவிட்டு ரயிலுக்குப் போய்விட்டார். பிறகு உடனே டவுன் ஹால் மைதானத்தில் இந்திய மாணவர் காங்கரஸ் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் போட்டு பேசுகையில் 'தினமணி'' உதவி ஆசிரியர் தோழர் திரவியம் என்பவர் பெரியாரைப் பற்றிப் பரிகாசம் செய்தும், இராமசாமி என்பவர் தோழர் அண்ணாதுரையைத் தாக்கியும் பேசினாராம். கூட்டத்தில் இருந்தவர்கள் கேள்வி கேட்டனர், கேள்விக்கும் பதில் சொல்ல மறுத்து மேலும் பேசவே கூட்டத்தில் கலவரம் ஏற்படும்போல் தோன்றியதால் போலீசார் கூட்டத்தைக் கலைக்க வேண்டியதாயிற்று. கலைந்து போய்க்கொண்டிருந்த மக்கள் ஒருவருக்கொருவர் ஒழிக, வாழ்க என்ற கோஷத்துடன் சென்றதின்றி கைகலக்கவேண்டி வந்ததாகவும் தெருவில் ஆரவாரம் செய்து கொண்டு போனதாகவும் தெரிகிறது. இம்மாதிரி சம்பவங்கள் ஏற்பட்டதற்கு ஆக நாம் மிகவும் வருந்துகிறோம். அதுவும் திராவிட மாணவர்களுக்குள், திராவிட மக்களுக்குள் அர்த்தமற்ற கட்சிகளின் பேரால் இப்படி ஏற்படுவது திராவிட சமுதாயத்திற்கும் பெரியதொரு இழிவாகும். ஜஸ்டிஸ் (திராவிட கழகம்) சுயமரியாதை ஆகிய கட்சிகளில் திராவிடருக்குக் கேடான கொள்கை, திட்டங்கள் என்ன இருக்கின்றன? தோழர்கள் காமராஜா, அண்ணாமலை, உபயதுல்லா, அவனாசிலிங்கம், சுப்பையா, பாலதண்டாயுதம் இன்னும் இவர்கள்போல் வாழ்நாளை காங்கிரசுக்கும், பொதுவுடைமைக்கும் ஒப்புவித்ததாகச் சொல்லப்படுகிறவர்கள் சொல்லட்டும். ஜஸ்டிஸ், சுயமரியாதை கட்சிகளை நடத்துகிற தோழர்கள் ஈ. வெ. ராமசாமி வேதாசலம், அண்ணாதுரை முதலியவர்களிடம் நாட்டு விடுதலைக்கு—சுதந்தரத்திற்கு-சுயமரியாதைக்குக் கேடான கருத்தும் காரியமும் என்ன இருக்கிறது. அல்லது இவர்களது உள்ளெண்ணத்திலாவது தனிப்பட்ட ஒழுக்கம், நாணயம் ஆகியவைகளிலாவது என்ன பித்தலாட்டம், இழிவு இருக்கிறது என்றாவது இவர்கள் சொல்லட்டும். அல்லது இவர்கள் எந்தப் பதவி, லாபம், வாழ்வுக்குப் பயன், ஆகியவைகளைப் பொது வாழ்வின் மூலம் எதிர்பார்க்கிறார்கள் என்றாவது சொல்லட்டும். இந்தத் தலைவர்கள் புகழ் எதிர்பார்க்கிறார்கள் என்றால் அது முட்டாள்தனமான பேச்சு ஆகும். புகழைப் பற்றி திருப்தி அடைவதும், மகிழ்ச்சி அடைவதும் ஜீவ இயற்கை. அது விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வந்துதான் தீரும். இருந்துதான் தீரும். யாருக்காவது புகழ் வந்தால் 'புகழுக்காகப் பாடுபடுகிறான்' என்று சொல்லித் திருப்தி அடைவது பொறாமைக்காரர்களுக்கு இயல்பு. அதனால் ஒரு மனிதன் புகழ்பெறுவது ஒரு நாணயக் குறைவான காரியம் ஆகிவிடாது. மற்றபடி திராவிட மக்களுக்குள் எந்தக்கட்சிக்காரரானாலும் கூட்டங்களில் கலவரம், குழப்பம் முதலியவைகள் நடக்க இடம் கொடுக்கக்கூடாது என்றும், இது எந்தக் கட்சியார் செய்தாலும் திராவிட சமூக இழிவுக்குத் தான் உதாரணம் என்றும் குறிப்பாக ஜஸ்டிஸ் (திராவிட), சுயமரியாதைக்கட்சி திராவிடர்கள் இதற்குக் காரணமாய் இருந்தால் நாம் அதிகம் வெட்கப்படுகிறோம் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஏன் என்றால் நமக்கு பொறுப்பு அதிகம், ஆகவேண்டிய வேலை அதிகம், எடுத்துச்சொல்லவேண்டிய சேதியும் வேண்டிய நேரமும் வசதியும் அதிகம் இருக்கவேண்

த்தையா

டும். ஆகவே நம்மவர்கள் "கலகஞ் செய்தார்கள். கலகத்துக்கு காரணமாக இருந்தார்கள்" என்றால் அது தற்கொலை என்று தான் கருத்து. ஆகவே பொன்மலைத் தோழர்கள் உள்பட காங்கரச பொதுஉடமை, ஜஸ்டிஸ், சு. ம. ஆகிய எல்லா கட்சியாரையும் வேண்டிக்கொள்கிறோம். நமக்குள் சண்டை, கலகம், காலித்தனம் ஏற்பட்டால் அது பார்ப்பனர்களுக்கு நன்மை ஏற்படச் செய்த முட்டாள்கள், இன உணர்ச்சி அற்ற ஈனர்கள் என்று உலகம் பழிக்கத்தான் பயன்படும். இதை நாம் கூலிகளுக்கும், ஈன வாழ்வு வாழ்ந்து தீரவேண்டிய ஈனப் பிறவிகளுக்கும் சொல்லவரவில்லை. அவர்களுக்கு நல்ல பிழைப்பு நாம் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டால் அல்லது அவர்களுக்கு கூலிகொடுத்து உசுப்பிக்கும் கீழ்மக்களுக்கு நாணயம் ஏற்பட்டால் உடனே நின்றுவிடும். மற்று யாருக்குச் சொல்லுகிறோம் என்றால் கடுகளவு திராவிட உணர்ச்சியும், திராவிட மானத்தில் இழிவும் கீழ்மையும் நீங்கவேண்டுமென்பதில் கவலையும் உள்ளவர்களைப் பார்த்துச் சொல்லுவதோடு பணிந்து வேண்டிக்கொள்கிறோம். மாணவர்கள் கொள்கைகளைப் பற்றிக் கண்டித்தும் பேசலாம். ஆனால் தலைவர்களைத் தாக்கிப் பேசுவது ஒழுக்கீனமான காரியமாகும். கூட்டங்களில் அனாவசியமான கேள்வி கேட்பதும் மரியாதையும் நாணயமும் அற்ற செய்கையாகும்.

இம்மாதிரிக் காரியங்களை மாணவர் செய்யும்படி பொறுப்புள்ள தலைவர்கள் பெரியவர்கள் அனுமதிப்பதும் பார்த்துக்கொண்டிருப்பதும் மிகவும் பொதுவில் கேடான காரியமாகும். இனியாவது இருதரப்பு மாணவர்களும் அவர்களை நடத்துபவர்களும் திருந்துவார்கள் என்று ஆசைப்படுகிறோம்.

---

திருவத்திபுரம் இலட்சுமி நூல் பதிப்பகம் 10-8-45-ல் "மறுமலர்ச்சி" பெற்றதன் நினைவாக அதன் உரிமையாளர் தோழர் மா. கா. இராசகோபாலிடம் "குடி அரசு"க்கு ரூ. 5 அனுப்பியுள்ளார்.

## பெரியார் சுற்றுப்பிரயாணம்

23-8-45 திருச்சி மாநாட்டு நிர்வாகக் கூட்டம்.
26- வேலூர் (சேலம்) திராவிடர் கழக ஆண்டுவிழா.
28- காத்துக்குடி பன்னீர்செல்வம் சங்க ஆண்டுவிழா
2-9-45 திட்டக்குடி திராவிடர் மாநாடு.

தோழர் ஜகந்நாதனும் செல்வார்.

## திருச்சியில் மாநாட்டுக் கூட்டம்

23-8-45-ஆம் தேதி காலை 10-மணிக்கு திருச்சி டவுன்ஹால் மண்டபத்தில், திருச்சியில் அடுத்த மாதம் 29, 30-ஆம் தேதிகளில் நடக்கப்போகும் ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவைகளின் மாகாண மாநாடுகள் பற்றிய நிர்வாகக் கூட்டம் நடைபெறும். 12-8-45-ல் கூடிய ஜெ. கூட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாக அங்கத்தினர்கள் யாவரும் தவறாமல் வரவேண்டுமாக வேண்டிக்கொள்ளுகிறோம்.

தி. பொ. வேதாசலம்,
சி. என். அண்ணாதுரை,
: செயலாளர்கள்.

## திட்டக்குடி மாநாடு

தென்னாற்காடு மாவட்ட திராவிட இளைஞர் 2-வது மாநாடு விருத்தாசலத்தையடுத்த பெண்ணாடம் ரயில்நிலையத்திலிருந்து 6-மைலில் உள்ள திட்டக்குடியில் 2-9-45 காலை 9 மணி முதல் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்கள். தோழர் கே. அன்பழகன் பி. ஏ., (ஆனர்ஸ்) கொடியேற்றுவார்.

மேலும், தோழர்கள் ஜனார்த்தனம் எம். ஏ., காஞ்சி-கலியாணசுந்தரம், புதுவை [illegible] பெருமான் கே. வி. அழகிரிசாமி ஆகியோர் பேசுவர்.

ஒலிபெருக்கியும், பெண்களுக்குத் தனியிடமும், மாலை பொதுக் கூட்டமும் உண்டு.

## ஆறுமுக நாடார் மறைவு

திருவாரூரில் திராவிடர் கழகத்திற்கும், சுயமரியாதை இயக்கத்திற்கும் பேருதவி புரிந்துவந்த அன்பர் எம். ஏ. ஆறுமுக நாடார் அவர்கள் திடீரென மறைந்ததை கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அன்னாரின் இழப்பு உண்மையிலேயே நம் இயக்கத்துக்கொரு பெரும் நஷ்டமாகும். அவர்தம் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## கொலைகாரனா, ஆகஸ்டு வீரனா?

சமீபத்தில் தூக்கிலிடப்பட்ட மகேந்திர சௌத்ரி ஆகஸ்டு கலவரத்தில் ஈடுபட்டவரென்றும், சுயராஜ்ய வீரர் என்றும் கத்தியார் முதலாகக் காங்கரசார் அனைவரும் கதறுகின்றனர். ஆனால் இப்போது பீஹார் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து அம்மகேந்திர சௌத்ரி என்பவர் ஆகஸ்டு கலவரத்தில் கலந்தவரல்ல என்றும், அதற்கு முன்பாகவே அதாவது 1943, மே, 11ந் தேதியன்று ஒரு கிராமத்தில் 14000 ரூபாய் கொள்ளையிட்டு இருவரைக் கொன்ற ஒரு வழக்கில் துப்பாக்கியுடன் பங்கெடுத்துக்கொண்டவரென்றும், அதற்காகவே தூக்கிலிடப்பட்டார் என்றும் தெரியவருகிறது.

11-8-45 சனிக்கிழமைமுதல்
திருவாரூர் கருணாநிதி தியேட்டரில்
நாகை திராவிட நடிகர் கழகத்தாரால், விழுப்புரம், புதுவை ஆகிய நகர்களில் வெற்றிகரமாக நடைபெற்று, வெள்ளிவிழா கொண்டாடிய
"சாந்தா"
என்னும் சமுதாய சீர்திருத்த நாடகம் தினசரி இரவு 10 மணிக்கு நடைபெறும்.
டிக்கட் விபரம்:- ரூ. 1-8-0, 1-2-0, 0-12-0, 0-8-0, 0-4-0,
பெண்கள் தரை 0-2-3
தலைவர்: ஆர். வி. கோபால் மானேஜர்: ந. ராமசாமி.

# இவ்வார நிகழ்ச்சிகள்

21-8-45 அன்று மாலை 7-மணிக்கு கும்பகோணம் திராவிடர் கழக உறுப்பினர்களின் பொதுக் கூட்டம் நாகேசுவரன் வடக்கு வீதியிலுள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெறும். கழகத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட வேண்டுமாகையால் அனைவரும் வருமாறு கோரப்படுகிறது.

26-8-45 மாலை 3 மணிக்கு சென்னை ஜி. டி., ஏழுகிணறு, மலையப்பன்தெரு 22 கட்டிடத்தில் சென்னைமாகாணசெடியூல்ட் வகுப்பு மாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். ஜில்லா வாரியாகப் பிரதிநிதிகளும், தொண்டர்களும் கலந்துகொள்வதோடு, தங்கள் யோசனைகளை 20-8-45-க்குள் அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

26-8-45 காலை 8-30 மணிக்கு கும்பகோணம் மகாமகக் குளம் மேல் கரை 15/225 கட்டிடத்தில், தாராஸ் டிரேட் ஹவுஸ் உரிமையாளர் பொ. ஜெகநாதன் தம்பியான தோழர் இளங்கோவனுக்கும், குடந்தை பி. நாராயணசாமி மகள் தோழர் ராமாமிர்தத்துக்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெறும்.

வடசென்னை, வண்ணாரப் பேட்டை, சௌந்திரபாண்டியன் வாலிபர் சங்கத்தின் கமிட்டி அங்கத்தினர்களின் விசேஷ ஆலோசனைக்கூட்டம் 26-8-45 காலை 10மணிக்கு நடைபெறும். தீர்மானம் அனுப்புவோர் 20ந் தேதிக்குள் அனுப்பவேண்டும். மேலும் 31-8-45ல் வருஷப் பொதுக்கூட்டம் நடைபெறும். வருடாந்தரக் கணக்குப் பரிசீலனை, பகுத்தறிவுப் புத்தகங்கள் வாங்குதல், 45-46 வருடத்திய வேலைத்திட்டம், நிர்வாகிகள் தேர்தல் ஆகியவைபற்றி யோசிக்கப்படும்.

தோழர் ஜி. நாகராஜ பத்தர் பி. ஏ., பி. எல்., அவர்களை வரவேற்புக்கழகத் தலைவராகவும், தோழர்கள் கே. எஸ். சிவராம கிருஷ்ணன், ஜி. சொக்கலிங்க பத்தர் ஆகியோரை செயலாளர்களாகவுங்கொண்டு பட்டுக்கோட்டையில் தென்னிந்திய விசுவகர்ம மகாஜனசங்க 14வது மாநாட்டையும் விசுவகர்மபெண்கள் 4-வது மாநாட்டையும் செப்டம்பர் மாதத்தில் நடத்த ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. தக்க தலைவர்களைத் தெரிந்தெடுத்து 24-8-45க்குள் அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சென்னை முத்தியால்பேட்டைத் தமிழர் கழகத்தின் முதல் ஆண்டு விழா 26-8-45 அன்று தோழர் மு. வரதராசனார் தலைமையில், லிங்கிசெட்டித் தெரு, நகர் மன்றப் பள்ளியில் நடைபெறும். காலை 9-30 மணி முதல் தோழர்கள் அன்பு கணபதி, மயிலை முத்துக்குமாரசாமி முதலியார், கே. அப்பாதுரைப் பிள்ளை, பக்கிரிசங்கரன் பேசுவர்.

மாலை 5-30 மணி முதல் தோழர் சுஸ். குருசாமி தலைமையில் தோழர்கள் அன்பழகன், கணேசன், மா. குமாரசாமி பேசுவர்.

கொளத்தூர் பாரதா லைப்ரரியின் 2-வது ஆண்டுவிழா 19-8-45 அன்று தோழர் என். மீனாட்சி சுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., தலைமையில் நடைபெறும்.

வேலூர் (சேலம்) திராவிடர் கழக ஆண்டுவிழா 26-8-45 காலை 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., தலைமையில் நடைபெறும். பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், சுஸ். தங்கமணி இராசன் ஆகியோர் பேசுவர். மாலை போலீஸ் மைதானத்தில் பொதுக்கூட்டமும், ஒலிபெருக்கியும் உண்டு.

23-8-45 மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன் ஹாலில், திருச்சி திராவிட இளைஞர் கழக (Y. M. D. A.) முதலாவது ஆண்டு விழா ஒலிபெருக்கியுடன் நடைபெறும். தோழர்கள் வி. முனிசாமி பி. ஏ., பி. எல்., ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

பட்டுக்கோட்டை திராவிடர் கழகம், சுயமரியாதைச் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகிகள் தேர்தல் 23-8-45 மாலை முறையே 4-30 மணி, 5 மணிக்கு போஸ்டாபீஸ் தெரு கலைமகள் வாசகசாலையில் நடைபெறும். அங்கத்தினர்கள் யாவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

பல்லடம் வியாபாரிகள் சங்க ஆண்டுவிழா 19-8-45 காலையில் திருப்பூர் சேர்மன் தோழர் கே. என். பழனிசாமி கவுண்டர் தலைமையில் நடைபெறும்.

இருகூர் தோழர்கள் என். கருப்பண்ணன்-வள்ளியம்மை திருமணம் 26-8-45 காலை 10 மணிக்குத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் நடத்திவைக்கப்படும். மாலையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் உண்டு.

கோவைத் தோழர் என். காசிம் அவர்களுக்கு 13-9-45 இரவு தோழர் பூதப்சேட் தலைமையில் நடைபெறும் திருமணத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், பி. கே. பாபு சாகிப், ஏ. எம். யூசுப் மரைக்காயர், டி. வி. நாராயணசாமி, எம். எம். ஏ. ரகிமான் ஆகியோர் சொற்பொழிவு செய்வர். சேலம் பாப்ஜான் இன்னிசை நிகழும்.

10-8-45 பொள்ளாச்சி கோள முஸ்லிம் யுவஜன சங்கத்தார் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் பி. கே. பாபு சாகிப் தலைமையில் தோழர்கள் ஏ. பி. குஞ்சு முகமது சாகிப், கே. வி. குஞ்சிப்பா சாகிப் பேசினர்.

---

## விளம்பரம்

சுருட்டுத் தொழிற்சாலையை விரிவாக நடத்தத் தீர்மானித்துள்ளேன். ரூ 100, நூறு ரூபாய் கொடுப்பவர்களை நிர்வாக அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படும். 3 வருஷம் கழித்துத்தான் பணம் பிரியப்பட்டால் திருப்பி வாங்கிக்கொள்ளலாம். வருஷத்தில் கிடைக்கும் லாபத்தில் பங்குத் தொகை தரப்படும்.

S. சோமசுந்தரம், செயலாளர்,
திராவிட நாடு சுருட்டுத் தொழிற்சாலை,
பிட்டக்குடி, தெப்பக்குளம் P. O.
திருச்சிராப்பள்ளி.

நூலக அறக்கட்டளை

# திராவிடக்கழகங்கள்

3-7-45 திருவையாறு இசைக்கலையில் தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் தோழர் வீராசாமி, பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செயலாளர் எம். பரமசிவம் நன்றி கூறினார்.

o o

8-7-45 ராசிபுரம் பெரியார் மாளிகையில் தோழர் வெங்கடாசலபதி தலைமையில் நடந்த திராவிடர் கழக உறுப்பினர் கூட்டத்தில் சென்ற ஆண்டின் அறிக்கை படித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. தோழர்கள் வெங்கடாசலபதி, எ. அருணப்பா, எம். காவேரி, எஸ். துரைசாமி, அப்துல் சுபான்கான் ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர், செயலுறுப்பினர் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

15-7-45 ஞாயிற்றுக்கிழமை கள்ளிகுளத்தில் தோழர் பாலையா தலைமையில் தோழர்கள் தங்கமணி, டேவிஸ், சேக், துரைசாமி, ஜமால்தீன் ஆகியோர் பேசினர். தோழர் ஜெயசிங் நன்றிகூறினார்.

o o

18-7-45 சேலம் அம்மாப்பாளையம் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் வி. சித்தையன் தலைமையில் கூடி, கழகத் துணைச் செயலாளர் தோழர் எஸ். சுப்பரமணியன் மறைவுக்கு வருந்தி, அவர் பதவிக்குத் தோழர் சி. முனிசாமியைத் தேர்ந்தெடுத்தது.

o o

21-7-45 கூடலூர் திராவிடர் சொற்பயிற்சிக் கழகத்தில், யுத்த சேவையிலுள்ள இயக்கத் தோழர் மாரிமுத்துக்கு ஒரு தேநீர் விருந்தளித்து அவரைப் பாராட்டித் தோழர்கள் நாதன், மணி, ராமலிங்கம், சுந்தரம் பேசினர்.

o o

21-7-45 உறையூர் திராவிட இளைஞர் கழகத்தின் ஆதரவில் தோழர் தம்பேரலர் மங்களநாதன் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எ. கே. மாச்சா இருவரும் பேசினர். தோழர் கே. சுந்தரம் நன்றி கூறினார்.

o o

29-7-45 அத்திக்குடி நகர திராவிடர் கழகம் தோழர் சொ. சீதிமாணிக்கம் தலைமையில் கூடி உறுப்பினர் சந்தா வசூலிக்க செயலாளருக்கு உரிமை கொடுத்து, மற்றும் பல தீர்மானங்களை நிறைவேற்றியது.

o o

2-8-45 திருச்செங்கோட்டில் தோழர் சோமசுந்தரம் தலைமையில் நடந்த திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அழகிரிசாமி, பெரியதுரை, வீரமணி ஆகியோர் பேசினர். தோழர் வி. எஸ். ராசன் நன்றி கூறினார்.

o o

5-8-45 திருச்சி காஜாப்பேட்டை திராவிடர் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் பி. வி. சுந்தரம் தலைமையில் கூடி கீழ்க்கண்டவர்களை நிர்வாக உறுப்பினராகத் தெரிந்தெடுத்தது. தோழர்கள் டி. எம். ராமநாதன்: தலைவர், பி. வி. சுந்தரம்: துணைத் தலைவர், டி. எம். வேணுமணி: செயலாளர், எஸ். ஜெகநாதன்: துணைச்செயலாளர், கே. கே. சாமி: பொருளாளர், மற்றும் 11 பேர் நிர்வாகக் கழக உறுப்பினர்கள். மேலும் (1) திராவிடர் கழக 17-வது பொது மாநாட்டை திருச்சியில் கூட்ட முயற்சிப்பதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்து தங்களால் ஆன உதவி செய்ய ஒரு தொண்டர் குழு அமைப்பதாகவும், (2) தங்கள் கழக ஆதரவில் ஒரு நாடகக் குழு ஆரம்பித்து தோழர் சி. என். அண்ணாதுரை எழுதிய "ச. ம. ஊர்?" என்ற நாடகத்தை விரைவில் நடப்பதாகவும், (3) தோழர் காஞ்சி-கலியாணசுந்தரனார் இந்நாளைய நமது சுதந்திரத்தை மறுத்து நிற்கும் பிரதிநிதிகளுக்கு அருந்துணையாக இருப்பதற்கு வருந்துவதோடு அக்குடும்பத்தாருக்குத் தம் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதாயும் தீர்மானிக்கப்பட்டது.

o o

24-7-45 செல்லாபுரம் திராவிடக் கழகத் தொடக்கவிழாவில் தோழர் தைம்பெரின் தலைமையில் தோழர்கள் டேவிட், ஆரோக்கியசாமி, சடையன், கோனு ஆகியவர் பேசிய பின் தோழர்கள் பொன்னுசாமி—தலைவர், வீராசாமி—உபதலைவர் ஆறுமுகம்-செயலாளர் பொருளாளர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

5-8-45 பண்ருட்டி திராவிட இளைஞர் கழகம் தோழர் பி. ஞானசிகாமணி தலைமையில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் தோழர் வி. டி. ராமச்சந்திரன் அவர்கள் திராவிட கழகத்தையும், தோழர் ச. கே. முருகேச இராமராஜன் அவர்கள் நமது பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் படத்தையும் திறந்துவைத்தார்கள். பின்னர் தோழர்கள் வி. எஸ். ஆர். சாமி தலைவராகவும், பி. சீனுவாசன் உபதலைவராகவும், மாணிக்கவேலு செயலாளராகவும், எஸ். ஆர். நாதன் துணைச் செயலாளராகவும், க. கே. முருகேச இராமானுஜம் பொருட் காப்பாளராகவும் மற்றும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## "சமத்துவம்"

செட்டிநாடு திருப்பினரின் நன்னுக்காக நாமக்கல்லிலிருந்து தோழர் பி. முத்துசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு "சமத்துவம்" என்ற வாரப்பத்திரிகை விரைவினில் வெளிவரும்.

மதிப்புரைகள்:

## தன்மான இயக்கம் சாற்றியது என்ன?

(ஆசிரியர்: மாயண்ணா. தேவராஜன், வெளியிடுவோர்: இலட்சுமி நூல்பதிப்பகம், கடைவீதி, திருவத்திபுரம்.

விலை: 2 அணா.)

சுயமரியாதை இயக்கத்தின் எல்லாக் கொள்கைகளையும் சுருக்கமாகவும், விளக்கமாகவும், எளிய இனிய தமிழ் நடையில், அழகிய அகற்பாவினால் ஒரு பகுதியில் கூறிவிட்டு, மறு பகுதியில் நீதிக் கட்சிக்கும் பெரியார் அளித்த நிகரிலாத் திட்டங்களைத் தீட்டியுள்ளார் ஆசிரியர். நம் கருத்திற்கு விலை அதிகமாய்த் தோன்றினாலும் மற்ற நூல்களைப் பார்க்கும்போது பரவாயில்லை என்றே படுகின்றது. தக்க தருணத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் மிக்க பயன்தரும் என நம்புகிறோம். இப் புத்தகம் நம் குடி அரசு பதிப்பகத்திலும் கிடைக்கும்.

## பிரம்மசமாஜக் கொள்கைகளும், பண்டைத்தமிழர் கொள்கைகளும்

[ஆசிரியர்: வித்வான் மா. இராசமாணிக்கம் பி. ஓ. எல்., வெளியிடுவோர்: தென்னிந்திய பிரம்மசமாஜ நிலையம், ஜார்ஜ் டவுன், சென்னை. விலை: ½ அணா.]

உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள சமீப காலத்திய பிரம்மசமாஜக் கொள்கைகளைப் பழந் தமிழர் கொள்கைகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். சில தமிழாசிரியர்களின் இவற்றைப்படி, பழந்தமிழிலக்கியங்களைத் தம் கொள்கைக்கேற்ற வழியில் வலித்து இழுத்துச் சென்று பொருள் கொண்டுள்ளது பொருந்தா வாதமாகவே தோன்றுகிறது.

## புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

[ஆசிரியர்: ஈஜீர், வெளியிடுவோர்: மின்னல் பதிப்பகம், புல்வலி வீதி, புதுச்சேரி. விலை: 3 அணா]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பற்றித் தமிழ்நாட்டார் இன்னும் நன்குணர்ந்திலர் என்ற குறையைப் போக்க மின்னல் பதிப்பகத்தார் இதை வெளியிட்டுள்ளனர். பாரதிதாசன் அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு, பாரதி, பெரியார் ஆகியோருடன் அவருக்குள்ள தொடர்பு, அவரது புதுமைக் கவிதையின் மென்மையான நயங்கள் ஆகியவை தீட்டப்பட்டிருக்கின்றன. நூலில் குறித்துள்ளவாறே இது மாணவருக்கு இன்றியமையாததாகும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்காகக் கீழ்க்கண்ட தோழர்கள் நிர்வாகக் கமிட்டியாகப் போடப்பட்டுள்ளது. பெரியார் ஈ. வெ. ராமசாமி தலைவர், தி. பொ. வேதாசலம், சி. என். அண்ணாதுரை, காரியதரிசிகள் கே. கே. நீலமேகம், பெரி. பொன்னுசாமி, குடந்தை வி. சின்னதம்பி, பி. ஆர். சுப்ரமணிய மூப்பனார், திருவாரூர் ஆறுமுக நாடார், திருவாரூர் ஆர். வி. ராஜன், பட்டுக்கோட்டை ரத்தினசாமி, நாகை காயாரோகணம் பிள்ளை, கோவை ஜி. டி. நாயுடு, எஸ். ஆர். சுப்ரமணியம், என். அர்ஜுனன், எ. கிருஷ்ணசாமி, உடுமலை கனகராஜன், பெத்தாம்பாளையம் பழனிசாமி, எம். சின்னையா நாயக்கர், அங்கப்பசெட்டியார், ஜோலார்பேட்டை பார்த்தசாரதி, திருவண்ணாமலை சித்தர செட்டியார், வேலூர் திருநாவுக்கரசு, ஜனார்த்தனம், வாணியம்பாடி கோவிந்தராஜுலு, திருப்பத்தூர் எம். நடேச பிள்ளை, திருகத்திப்புரம் சுப்பராய முதலியார், சேலம் ஜெகதீசன், பேளுக்குறிச்சி சோமசுந்தரம், ரோசு. அருணாசலம், எம். ஆர். சித்தையன், திண்டுக்கல் மந்திரன், மதுரை முத்திருளாண்டி, சக்குனி, காரைக்குடி ராமசுப்பையா, அருணாசலம், ராமசுப்ரமணியம், விருதுநகர் ஆசைத்தம்பி, சிவகங்கை ராஜசேகரன், இமயவரம்பன், திருநெல்வேலி ஏ. வி. முத்தையா, பிரமநாயகம் பிள்ளை, தூத்துக்குடி பொன்னுசாமி நாடார், திருச்சி என். சங்கரன்பிள்ளை, அண்ணாமுத்து அம்பலகாரர், டி. எம். முத்து, கரு. ரத்தினம், பெருமாள் நாடார், கடலூர் மா. பீட்டர் பி. ஏ., புவனகிரி சுமங்கலியார், கடலூர் ஷண்முகசுந்தர நாடார், விழுப்புரம் கோவிந்தராஜுலு நாயுடு, செங்கல்பட்டு டி. சண்முகம், ஏ. கே. தங்கவேல், டி. பி. எஸ். பொன்னப்பா, டி. ஏ. சாமி, முதலியோர்கள். இக்கமிட்டிக்கு இன்னும் 15 பேரை நியமிக்க தலைவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று தோழர் சி. என். அண்ணாதுரை தீர்மானிக்க, தோழர் திராவிடமணி ஆமோதித்தார். இத்தீர்மானம் எல்லோராலும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. அமைப்பாளர்களே மாநாட்டின் செயலாளர்களாக இருப்பதென்றும், மாநாட்டுக்கு வேண்டிய எல்லாவித தற்கால முன்னேற்பாடுகளையும் செய்ய செயலாளர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகவும், மாநாட்டின் பிரதிநிதி கட்டணம் (சாப்பாட்டு வசதி கிடையாது) ரூ. 1. எனவும், இரு மாநாடுகளுக்கும் வரவேற்புக் கழக உறுப்பினர் கட்டணம் ரூ. 5 எனவும், மேற்குறிப்பிட்ட கமிட்டி 23-8-45 அன்று திருச்சி டவுன் ஹாலில் [illegible] தீர்மானிக்கப்பட்டது.

வரவேற்புக் கழக உறுப்பினர்கள்:- தோழர்கள் ராமலிங்கம், ரங்கசாமி (திட்டக்குடி), வீரசேகரன் (திண்டுக்கல்), செல்லையா (கருமபுரி), சீ. வி. எம். வெங்கட்டையர் (உறையூர்), டி. வி. பிச்சையா (திருவரம்பூர்), கே. கே. சாமி, ஜம்புலிங்கம், ஞானமாமலை, டி. வி. நாராயணசாமி, என். நடேசசாமி (பட்டுக்கோட்டை), மந்திரன், [illegible] (திண்டுக்கல்), பி. வி. சுந்தரம், பி. என். நாராயணசாமி, பீமராவ் கிருஷ்ணன், வி. ராமச்சந்திரன், என். சுப்பையா, கும்பகோணம் நீலமேகம், சின்னதம்பி, பொன்னுசாமி, சுப்பிரமணியமூப்பனார், டி. எ. சாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், சி. என். அண்ணாதுரை, டி. பி. வேதாசலம், பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியோர் அங்கேயே பணம்கொடுத்து மெம்பர்களானார்கள்.

செயற்குழுவும் (Working committee) துணைக் குழுவும் (Sub-committee) கூடும் வரையில், அதாவது 23-8-45 வரையில், செயலாளர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்களே காரியங்களைக் கவனிப்பார்கள். பணம் முதலிய பொறுப்புகள் அவர்களிடமேயிருக்கும்.

ஆலங்குடி சமதர்ம வாசகசாலையின் 6-வது ஆண்டுவிழா 30-7-45 தோழர் சாமியய்யா பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல வெளியார்கள் சொற்பொழிவாற்றினர். 6வது ஆண்டின் நிர்வாகஸ்தர்களாகத் தோழர்கள் நா. ம. சிதம்பரம் தலைவராகவும், எம். கருப்பையா செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மறைவு

15-7-45 மதுரை டாக்டர் வி. எஸ். சண்முகானந்தம் தாயார் அம்மணியார் செங்கமலத்தம்மாள் மறைந்ததற்காக நடந்த இரங்கல் நாளில் தோழர் ரெங்கசாமி தலைமையில் தோழர்கள் அய்யாசாமி, ராஜுசாமி, ராமமூர்த்தி, இலட்சுமணன், பொன்னையா சொற்பொழிவாற்றினார். தோழர் சண்முகானந்தம் நன்றி கூறினார்.

21-7-45 தஞ்சை கீழவாசல் மணியம் ஜம்புலிங்கம், தகப்பனார் பெரியசாமி நாடார் மறைவுக்காகத் தஞ்சை நகர திராவிடர் கழகத்தார் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

23-7-45 காஞ்சீபுரம் தோழர் சி. என். வரதராசம் தாயார் அமிர்தம்மாளின் நினைவுநாள் தோழர் பி. சபாபதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. பி. எஸ். பொன்னப்பா, சி. வி. எம். அண்ணாமலை, ஏ. வெங்கட்ராமன், கண்ணப்பிள்ளை முதலியோர் சொற்பொழிவாற்றினர். ஒரு [illegible] நடைபெற்றது.

# திராவிட நாட்டுச் செய்திகள்

20-7-45 அம்பிகாபுரம் அண்ணாதுரை பகுத்தறிவுக் கழகக் கூட்டம் தோழர் ஆ. அருணாசலம் தலைமையில் நடந்தது.

தோழர்கள் எம். குருசாமி, பி. ஆத்தக்கன், பி. பெருமாள் ஆகியோர் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கழக மூன்றாவது ஆண்டு அலுவல் உறுப்பினராகத் தலைவர் சேட் பி. அரசப்பா, அமைச்சர் பி. செல்லையா, நிதிகாப்பாளர் பி. அருணாசலம், சந்தா வசூலிப்பவர் எம். செல்லையா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கழக மூன்றாவது ஆண்டு ஆரம்ப விழாவை குமாரவிலாஸ் கே. எம். பிரமநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

2-8-45 காரப்பிடாகை பள்ளி மாணவர்கள் ஆடி பதினெட்டாம் பெருக்கை முன்னிட்டு பெரியார், சர் செல்வம், அண்ணாதுரை, பாரதிதாசன், சுந்தரன் முதலியவர்கள் படங்களை வைத்து ஊர்வலமாக, ஆரியம் ஒழிக! தமிழ் வாழ்க!! திராவிடநாடு திராவிடருக்கே!!! என்ற ஒலியுடன் வீதி ஊர்வலம் வந்தனர்.

3-8-45-ல் தோழர் பி. எம். திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கோவை மருத்துவர் சங்கக் கட்டிட அமைப்பு உதவி நிதி வசூலிப்பதாகவும், அதற்கான வேலைகளை உடனே தொடங்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

16-7-45 வேளுக்குடி போர்டு ஸ்கூல் தலைமையாசிரியர் தோழர் கே. கடாட்சமணி மாற்றப்பட்டதை முன்னிட்டு தோழர் எஸ். குருநாதன் தலைமையில் பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது.

13-7-45 தாம்பரம் கார்லி உயர்நிலைப் பள்ளி தமிழ்க் கழக தொடக்கவிழா தோழர் கனகராஜ் எம். ஏ. தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. அன்பழகன் சொற்பொழிவாற்றினார். புலவர் மு. கலியபெருமாள் நன்றிகூறலுடன் முடிவுற்றது.

தோழர் கே. ஏ. ஹமீத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு திண்டுக்கல்லிலிருந்து 'இரமைச் செய்தி' என்ற தமிழ் வாரப் பத்திரிகை விரைவில் வெளிவரும்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.